கற்பின் பெருமையும் பக்தியின் மாண்பும்

அல்லது

# சுசீந்திர ஸ்தல மஹிமை.

---

இத்துடன்

## கன்னியாகுமாரி ஸ்தலமஹிமையும்

சேர்க்கப்பட்டிருக்கிறது.




ஆக்கியோன்:

எஸ். நாகலிங்கம் பிள்ளை

சந்நிதித் தெரு, சுசீந்திரம்.


முத்திரையில்லாத புஸ்தகம்
வியாஜியமெனப்படும்.


[...s Reserved]

[விலை அணா 8.



...F
...:385wsi

கற்பின் பெருமையும், பக்தியின் மாண்பும்

★ அல்லது ★

# சுசீந்திர ஸ்தல மஹிமை.

SHANDAR



ஆக்கியோன்:—

**எஸ். நாகலிங்கம் பிள்ளை, சுசீந்திரம்.**

கற்பின் பெருமையும், பக்தியின் மாண்பும்

அல்லது

# சுசீந்திர ஸ்தல மஹிமை.

---

ஆக்கியோன்

**S. நாகலிங்கம் பிள்ளை,**

சுசீந்திரம்.

நாகர்கோவில்

அலெக்சந்திரா பிறஸில் அச்சிடப்பட்டது.

# நான்முகம்

தக்ஷிண கைலாசம் என்று பல்லோரும் புரிந்து பாராட்டும் சுசீந்திரம்கோவில்; ஹிந்துக்களுடைய முக்கிய ஆலயத்தில் ஒன்று எனக்கூறவேண்டியதில்லை. தேவேந்திரன் இடர்நீங்கி இன்பம் எய்தியதும் இவ்விடத்தே என்றால் இதன்பெருமையை இயம்பவும் கூடுமோ? இத்தன்மை வாய்ந்த இவ்வாலயத்தில் தரிசனத்துக்காக நாள்தோறும் வரும் பக்தர்களை எண்ண இயலாது. இங்ஙனம் பெயர்போன இதன் மஹிமையை என்போன்ற பாமரர்களுக்கு பகரவேண்டுமென, யான் பலநாள் எண்ணங்கொண்டேன். தற்போது கடவுளின் அருளால் அவ்வெண்ணம் ஒருவாறு நடந்தேறியது. ஆகவே, கற்பின் பெருமையும் பக்தியின் மாண்பும் என்னும் தலைப்பின்கீழ் இச்சுசீந்திர ஸ்தல மஹிமையின் நுண்மையை எனது நுண்ணறிவுக்கு எட்டிய அளவு உணர்த்த முயன்றேன். நிற்க,

நம் தாய்நாடாகிய தமிழ் நாட்டில் பண்டைக்காலத்துப் பெண்மணிகள் கற்புக் களஞ்சியமாக, காசினியில் விளங்கினார்கள் என்பது அறிஞர் யாவரும் அறிந்த உண்மை. அதிலும் ஓர் பெண்மணி கிழவர்களை தம் கற்பு நிலையால் குழவியாக்கினாள் என்று கூறுமிடத்து அவ்வம்மையாரது சரித்திரத்தை படித்துப் பார்க்க யாவருக்கும் அவா உண்டாகுமென்பது திண்ணம்.

மேலும் நம்நாட்டு பெண்பாலர் அனைவரும் படித்து பின் பெருமை இத்தன்மையுடையதென ஆராய்ந்து அறிவது, தற்கால நிலைக்கும் தகுதியாகும்.

இவ்விரண்டு நோக்கங்களையும் மேற்கொண்டு "கற்பின் பெருமை" என்ற பெயரால் இந்நூலின் ஓர் பகுதியை எழுதலானேன்.

இன்னும், ஆலயம் ஒரு குலத்துக்கே உரியது. கடவுளுக்கு வழிபாடு ஏன்? என விளம்பரம் இக்காலத்தில் ஒருவர் தம் மாசற்ற பக்தியால், தனக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கினர் என்று கூறும்போது ஒருவாறு கடவுளிடமும் ஆலயத்தினிடமும் ஆன்ற பக்தி உண்டாகும் என்ற மற்றோர் எண்ணத்துடன் இரண்டாம் பகுதியாக "பக்தியின் மாண்பு" என மகுடமிட்டு வரையலானேன்.

இதற்கு மேற்கோளாக சில தொன்மையான கிரந்தங்களையும் ஆலயத்திலுள்ள சில கல்வெட்டுகளையும் எடுத்ததுண்டு.

இந்நூலை வாசிப்போர், சொற்பிழை, பொருட்பிழை இவைகளை கவனியாது நன்மையிலே நாடி எனது முயற்சியை பயனுடையதாக்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் தாணுமாலயனை முழுமனதுடன் இறைஞ்சுகிறேன்.

சுசீந்திரம்,
25—2—1117.

S. நாகலிங்கம் பிள்ளை.

# கடவுள் வணக்கம்.

பூமாது பொருந்திய மார்பினனு
நாமாது திருந்திய நாவினனும்
தாமாதரனுஞ்சிவ தாணுவெனஞ்
சீமானை நினைந்து தினம் பணிவோம்

சு. பு.

# நூற் பயன்.

சித்ரே புகழ் சுசீந்திரத்து மான்மியம்
பத்தரே படித்தவா கேட்கும் பாண்பினோர்
முத்தரே யாவரு முவரும் மாவர்
அத்தரே யாவரென்றறிந்து கொண்மினே

சு. பு.

# கற்பின் பெருமை.

---

## பகுதி 1.

### கானகமும் கற்பிற்கரசியும்

பல்லோராலும் பயந்து பாராட்டும் சுசீந்தை மாநகரம் ஓர் காலத்தில் பெரும் காடகவே இருந்தது. காடு என்று சொன்ன அளவில், சாதாரண ஓர் சிறு காடென்று நினைத்துவிடலாகாது. துஷ்ட மிருகங்களின் ஆரவாரத்தாலும், வண்டுகளின் ரீங்கார ஒலியாலும், கதிரவன் கதிரைத் தடைந்து நிறுததும் வளம்பெற்ற ஓங்கிய வன மரங்களாலும், கண்டோர மனதை அச்சமுறச் செய்யும் வனப்புடையதாயிருந்தது.

எனினும், மங்கள வாத்தியம் முழங்குவது போல் மரங்களிலிருநது புட்கள் சலசல சப்தத்துடன் கூறுவதும் வனதேவதையின் மந்தகாசததைப்போல் ஒவ்வொரு மரத்தின் உச்சியிலும் பல்வகை மலர்கள் ஒரே சமயத்தில் மலர்ந்திருப்பதும், அம்மலர்கள் உதிர்ந்து மிருதுவான மெத்தை விரித்திருப்பதுமான ஓர் அழகிய இடம் இவ் வடவியில இலங்கியது.

இங்கே பொற்கிரணங்களாகிய ரதத்திலேறி நீல நிற ஆகாய மார்க்கமாய் நமஸ்கரிக்க வருகின்றதோ வெனத் தோன்றுமாறு, மெதுவாய்ப் பூமியில் வந்து இறங்குகின்ற உஷாதேவியின தன்மையை நினைக்குப்பொழுது, யாரோ

உள்ளத்தை வீணுக்க வேண்டாம். யாகம் நிறைவேறிவரும் வரையில் தங்களது கிருபையால் தயங்காது வாழ்வேன் என்று கூறி தன் இடம் இருந்த கங்கா தீர்த்தத்தால் கணவன் திருவடிகளை சுத்தி செய்து, அப்பாதுகைநீரை குடத்தில் ஏந்தினள்.

இவைதககண்ணுற்ற முனிவர் ஆச்சரியங்கொண்டு பெண்ணே! நீ செய்த இத்தொழிலின் நன்மையாதென்று வினவ தேவியானவள் இத்தீர்த்தம் என்னிடம் இருக்குமாயின் தாங்கள் என் அருகாமையில் அமர்ந்திருக்கும் போதுள்ள தைரியம் எனக்கேகுமென மறுமொழி பகர்ந்தாள்.

மனைவியின் மாசற்ற மனக்கருத்தை அறிந்த முனிவர் அவளிடம் விடைபெற்று அகமலர்ச்சியுடன் இமய மலைக்குச் சென்றார்.

மலையை அடைந்ததும் தேவர்களையும் முனிவர்களையும் எண்ணி ஓர் தெய்வ யாகம் செய்தார். யாகக்குண்டத்திலிருந்து அக்கினி தேவனானவன் தோன்றி மேலுலகமும் கீழுலகமும் ஒன்றுபோல் ஓங்கி ஜ்வலிக்க, ஆமை ஆசனத்தில் அமர்ந்து அத்திரி முனிவர் ஆதி மந்திரத்தை உச்சரித்தார்.

மந்திரத்தின் அரும்பெரும் மகிமையாலோ அத்தி, இத்தி, ஆல், அரசு, புங்கு, புளி, பூலாத்தி என்ற ஸப்த மரங்களின் ஸானித்தியத்தாலோ, தேவர்களும் ரிஷிபுங்கவர்களும், அவ்விடம் வந்து அணுகினர். இவர்களில் மும்மூர்த்திகளும், தேவேந்திரனும் தோன்றாதிருக்க, முனிவர் அவர்களையும் தியானித்து, தனது கர்மத்தை நடத்

தினர். தேவபதி தனக்கு நேர்ந்த சாபத்தால் வெளிவர வெட்கம் கொண்டானெனினும், அத்திரியின் அரும் முயற்சியால் அவர் முன் சென்றனர். ஆனால் மும்மூர்த்திகள் வாராததையிட்டு, முனிவர் செய்கையினால் சோர்பு அடைந்திலர்.

## பாத தீர்த்தத்தின் பெருமையும், பார்த்தோர் வியப்பும்.

யாகத்தின் தீவிரத்தால் மும்மூர்த்திகளும் யாக சாலைக்குப்போக விரும்பாது, யாகத்தை அழிக்க எண்ணம் கொண்டார்கள். இவ்வெண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு, திரிலோக சஞ்சாரியான நாரத முனியை மனத்திடை நாடினர், நடவே, முனிவரும் அவ்விடம் வந்துற்றார்.

நாரதர் அவர்களைப் பணிந்து தன்னை விரும்பி அழைத்த காரணம் யாதென வினவினர். அப்போது சிவ பெருமான் நாரதரைப்பார்த்து "ஓ நாரதமுனியே! ஞாநு ரண்ய வாசியும் தற்போது இம்மலைச்சார்வில் யாகம் செய்ப வருமாகிய அத்திரி முனியை அங்கிருந்து அகற்ற வேண்டும" என்றுகூற, நாரதர் அதற்கிசைந்து தேவரீர்களே! இல்ல றத்தில் அவர் வாழினும், பற்றற்ற துறவியே ஆவர். ஆயி னும், உங்கள் கிருபையால் என்வேலையைப்பணிந்து பார்க் கிறேன் எனபகிர்ந்து மறைந்தனர்.

இவ்வாறு கூறி நாரதர் ஞானாரண்யத்தில் வந்து சில முனிவர்களோடு அனசூயாதேவியின் ஆச்சிரமம் அணுகினர்.

பெரியோர்களது வருகையைக்கண்ட தேவியானவள் வேண்டிய உபசாரங்கள் செய்து, விரும்பி வந்ததின் விபரம் யாதென வினவினாள். அம்மாளின் அமுதம் போன்ற மொழிகளைக் கேட்டதும், முனிவர்கள் மழையில்லாத காரணத்தால் விளைவு குன்றி பசிப்பிணியால்வருந்துகின்றோம். எப்படியும் கண்கூர்ந்து காப்பாற்ற வேண்டுகின்றோம் என்றார்கள். இரக்கத்தையும் இன்னலையும் கொடுக்கின்ற இவ்வார்த்தைக்கேட்ட தேவியானவள் எந்த விதமான தர்மத்துக்கு இச்சை கொண்டிருக்கிறீர்கள் என்றாள்.

மனித சஞ்சாரமில்லாத இப்பெரும் அடவியில் மருவியும், எந்தவிதமான தர்மம் வேண்டும் என்கிறாளே என வந்தோர் ஐயமுற்றார்கள். பின் அவளைச்சோதிக்க எண்ணி நாரதர் ஏவலால் ஒவ்வொருவரும் ஒவ்வொருதர்மத்துக்கு ஆசைகொண்டார்கள்.

"கணவனே கடவுள் என்று தியானித்துக்கொண்டிருக்கும் அவ்வம்மையானவள், கணவனின் பாத தீர்த்த பராசக்தியால், அவர்கள் எண்ணங்களை நிறைவேற்றினாள். தீர்த்த மஹிமையால், மண் பல வடிவமாக மாறிய அற்புதத்தை, அண்டையிலிருந்து கண்ணுற்ற நாரதர் கீழ்திசையை நாடிச்சென்றார். மூன்று மைல் சென்றதும், மருங்கூர் என்னும் ஊர் வந்தார். அங்கு கடலை உருவாய் தென்பட்ட இரும்புத் துண்டுகளை எடுத்து இம்பர்உலகம் எய்தினர்.

# மும்மூர்த்திகளது தேவிமாரின் முகவாட்டமும் அனசூயையின் அதிரற்ற வல்லமையும்

இம்பர் உலகம் எய்தின நாரதர் மும்மூர்த்திகள் இல்லாத தருணம் பார்த்து அம்மையை உலகத்தில் பெரியோர் என்று போற்றும் பெருமையை வாய்ந்தவர்களே எனக்கோர் உதவி புரியுங்கள் எனவேண்ட, அவர்கள் மனமிசைந்து தங்களால் இயன்ற உதவி புரிகிறோமென மொழிந்தார். இதைக்கேட்ட நாரதர் தான் கொணர்ந்த இரும்புக்கடலையை பொரித்துத் தரவேண்டுமென இரங்கினார்.

தேவிமார்கள் கடலையை வாங்கிப்பார்த்து இஃதென்ன! இரும்பைப் பொரிப்பது எங்ஙனம்? இஃது எங்களால் இயலாது, உமக்கு, என்ன பித்து பிடித்ததா? என்று மறுத்துவிட்டனர்.

இஃதைக்கேட்ட இருடி இவ்விரும்புக் கடலையை நாம் பொரித்துக்கொண்டு வருகிறோம். இத்தைத் தின்று பார்த்து என்னை மதியுங்கள் என்றுகூறி, பூலோகத்தில் வாழும் அனசூயாதேவியிடம் வந்து அணுகினர்.

பயபக்தியுடன் பன்னசாலையில் வந்த நாரதரைத் தேவியானவள் பார்த்து, யாது காரணத்தால் இவ்விடம் வந்தீர் என்று கேட்க, நாரதர் தன் மனக்கருத்தை வெளிவிட்டார்.

நமக்கோர் பிழைத்த காலமாயிருக்கிறது. வருவதெல்லாம் சோதனையாகவே இருக்கிறது. வருவது வந்துதானே தீரும் என்று தனது கற்பின் வன்மையால் இரும்புக்

கடலையை வாங்கி கணவனைத் தியானித்து பாதநீர்த்தத்தின் சக்தியால் பொரித்துக்கொடுத்தனள்,

கடலையை வாங்கினதும் அடங்கா மகிழ்ச்சியுடன் நாரதர் அம்மையாரிடம் வந்து பித்துப் பிடித்தவன் பொரித்துக்கொண்டு வந்திருக்கும் கடலையைத் தின்று பெரியவர் என்ற அகந்தையை விடுங்கள் விடுங்கள், என்று கூறிய நாரதரைப்பார்த்து தேவிமார்கள் இஃது என்ன விந்தையாக இருக்கிறது! யார் இதைப்பொரித்துத் தந்தனள்! இரும்பை பொரிக்கவும் இவ்வுலகில் உடல் எடுத்தார் உளரோ? என அவாவுடன் கேட்டனர்:

இதற்கு நாரதர் அம்மையே! இரும்பை மட்டுமல்ல எந்தப்பொருளையும் எவ்விதத் தன்மையிலாக்கவும் வல்லமை வாய்ந்த ஓர் தேவி, அத்திரி முனிவரின் அரும் தவத்தால் அனசூயா என்னும் பெயரோடு அவனியில் கற்புக்களஞ்சியமென விளங்குகின்றாள். அம்மாது இருக்குமளவும், உங்களுக்கு ஓர்விதமான பெருமையும் சிறப்பும் கிடையாது. இஃது திண்ணம் என்று நாரதர் கூறியதைக் கேட்ட தேவிமார்கள், கடவுளது பத்தினிமார்களாக விளங்கும் நமக்கு இக்குறை நேர்ந்ததோ என முகவாட்டமுற்றார்கள்.

---

## தேவிமார்களின் பொறாமையும் மும்மூர்த்திகளின் முயற்சியும்.

இவர்கள் கடவுளின் பத்தினிகளாகக் காசினியிலுள்ளோர் கழறினும், பெண்பால் என்ற பெயர்க்கிணங்க அனசூயையிடம் பொறாமை கொண்டார்கள். இங்ஙனம்

தங்கள் நிலைக்குத்தகாத குணத்தைக்கொண்ட இம் மாதர்கள், அனசூயையின் கற்பை அழிக்க வழியென்ன வென நாரதரிடம் வேண்டினர். அதற்கு நாரதர் அம்மா! அஃது உங்களால் இயலாது உங்கள் கணவரது அரும் முயற்சியால் ஒருவாறு கைகூடுமென எண்ணுகிறேன். அதனால் நீங்கள் உங்கள் கணவரிடம் "அத்திரி முனியின் மனைவியாயிருக்க நாங்கள் கருதுகிறோம். ஏனெனில் கற்பு வாய்ந்த அவரது மனைவி இருக்குமளவும், உங்கள் பத்தினி யாக அமைந்த எங்களுக்கு பயனில்லை. ஆகையால் அவளது கற்பை அழித்தாலன்றி நாங்கள் உயிர் தரித்திரோம்" என உணர்த்தினால் அவர்கள் உங்கள் எண்ணத்தை ஒரு வாறு முடிக்கக்கூடும் என்று மொழிந்து அங்கிருந்து அகன்றார்.

நாரதர் சென்றதும், தங்கள் கணவர் எப்போது வருவார் எனத்தயங்கிக்கொண்டிருக்கும் தறுவாயில், தம் தம் நாயகர் முன்னே தோன்றினர். ஒவ்வொருவரும் தமக்கு ஏற்பட்ட இன்னலை இயம்ப மூவரும் அவர்களது வருத்தத்தை தீர்ப்போமென வாக்குறுதி செய்து அங்கிருந்து அனசூயாதேவி அமரும் ஆரண்யம் அடைந்தனர்.

மங்கை வார்த்தைகேட்டு, மனமிளகி முயல்வோர் மந்த புத்திகளாம் என்பதை நினையாது கடவுட் தன்மை வாய்ந்த இவர்களது நிலை "வரும் விதி இராத்தங்காது" என்னும் முதுமொழிக்கிணங்கியே இருந்தது. அந்தோ! மும்மூர்த்திகளே இங்ஙனம் மோகங்கொள்வாராயின் மானிடப்பிறவி வாய்ந்த நம்மவர்களின் நிலையை எடுத்து இயம்பவும் கூடுமோ?

## கற்பின் பெருமையும், கிழவர்களது குழவிப்பருவமும்.

மூவரும் முதுகிழவரைப்போல் வேடம் பூண்டு அனசூயாதேவியிடம் சென்றனர். தன்னகத்தே வரும் யாவருக்கும் தடையின்றி உபசரிக்கும் உத்தமியாகிய தேவியானவள் இவர்களைக் கண்டதும், அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்தனள். உடனே இவர்கள் பசியின் கொடுமையால் இப்பதியிடம் புகுந்தோமெனப் புகல உடன்பட்ட உள்ளத்துடையவளாய் நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றும் பொருட்டு கூறினள்.

மூவர்களும் அருகாமையிலுள்ள பிரஞ்ஞாத தீர்த்தத்தில் வந்து ஸ்நானம் செய்து அநுஷ்டானங்களை முடித்து ஆச்சிரமம் சென்றனர். இத்தருணம் தேவியானவள் கணவனது பாததீர்த்த பராசக்தியால் அறுசுவை உண்டிகளை அமுதம் போன்று படைத்தனள். அவர்கள் வந்ததும் ஆசனம் இட்டு அமரச்செய்து இலையிட்டு இலவணம் பருமாறி சாதம் கொணரச் சித்தமானாள்.

களங்கமனத்திராய் கிழவர் மூவரும் திடுக்கிட்டார் போல் எழுந்து விட்டார்கள். இஃது கண்டதும் என்ன மோசம் செய்தோமெனக் கவலையுடன் தேவியானவள் யாது நேர்ந்ததென்று அவர்களிடம் அடிபணிந்து அழுது கேட்டனள். அதற்கு அவர்கள் மழையில்லாத காரணத்தால் மண்டலம் ஒன்று உணவில்லாமல் வருந்திய நாங்கள் உண்ணவேண்டுமானால் ஒரு நோம்பு உண்டு அந்நோம்பு முடிந்தாலன்றி உணவு ஏற்றுக்கொள்ள கூடாதென பதில் கூறினர்.

எவ்விதமாகிய நோன்பானாலும் இவ்விடம் அனுஷ்டித்து பசிப்பிணியைத் தீர்த்துப் போவதே பார்ப்பனராகிய உங்கள் கடமையென, மாசற்ற மனமுடைய மங்கையின் கூற்றை கற்புக்கரசியெனக் கனவிலும் நினையாத இவர்கள் பிறக்கும்போது எக்கோலத்துடன் எழுந்தனையோ அத்தன்மையில் அன்னம் பருமாறினால் அருந்துவோமென, வருந்துயரை எண்ணாத உயரியப்பெண்பாலிடம் மொழிந்தனர்.

இஃதைச் செவியுற்றதும் என்ன மாயமோ நமக்கோர் துன்பகாலமென தளர்ந்த மனதுடன் தாழ்ந்த முகத்தினராய் திகைத்தனள். சற்று நேரம் பொறுத்ததும், திகைத்தால் பயன் யாது? கணவனே கடவுள் என்றும், கற்பே நன்னெறி யென்றும் நினைத்து நாள்போகும் யான், எனது கற்பின் பெருமையால் அவர்கள் கூற்றுக்கிணங்க அவர்களது ஆசையை முடிப்பேன். அவ்வாறு செய்யாவிடில் பெண்ணுருக்கொண்ட யான் கற்பணிப் பூண்டதினால் காசினியில் யாது பயன்? மனமே! உன் கடவுளின் பாத தீர்த்தமானது உன் அருகாமையில் இருக்கும் போதும் உனக்கு எங்ஙனம் துயர்நேரிடும் என்று மனஉறுதிப்பட்டு பாத தீர்த்தத்தை கையில் எடுத்து கணவனை தியானித்து குழந்தையாக மாறக்கடவதென கிழவர்களின் தலைமேல் தெளித்தனள்.

என்ன அதிசயம்! பெண்களின் கற்புக்கு இத்தனை பெருமையுண்டா? கற்பில்லா பெண்களே! இக்கருத்தை நினையுங்கள என்று தோன்றுமாறு ஆக்கல் அழித்தல் பேணுதல் என முத்தொழிலையும் புரியும் மும்மூர்த்தி

களும் கற்புக்களஞ்சியமான இப்பெண் மணியால் பால்மணம் மாறாக் குழவியானார்கள் என்று கூறவேண்டியதாயிற்று.

குழவிப்பருவம் வாய்ந்த இவர்களைத் தேவியானவள் அவர்கள் எண்ணப்படியே பால் ஊட்டி பசிப்பிணியாற்றி தனது கற்பை காசினியில் நிலைநாட்டினாள். அந்தோ! கற்பின் பெருமையே பெருமை.

---

# அத்திரியின் வருகையும் அனசூயையின் அறவொழுக்கமும்.

---

குழந்தைகளால் அடையும் குதூகலம் உணர்ந்திராத அவ்வம்மையார், இக்குழந்தைகளை ஈன்றெடுத்த மாதாவைப்போல் இனிது காப்பாற்றினாள். சற்று நேரத்தில் குழந்தைகள் கண்துஞ்சவும் களிப்புடன் துயிலச்செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன், கணவனை தியானித்து மூன்று தொட்டில்கள் வரவழைத்து, குழந்தைகளை அதில் அமர்த்தினள்.

கற்புடைய மாதர்களுக்கு எதுதான் கைகூடாது கண்ணகி என்ற கற்புக்கடவுள் மதுரைமா நகரை சொல்லளவில் நீறாக்கவில்லையா! நிற்க,

தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளைக்கண்டு ஆனந்தக்கடலில் ஆழ்ந்து, அரும் பொருள் வாய்ந்த மொழிகளால் அம்மையானவள் தாலாட்டினாள். இவ்வினிய குரலின் இனிமையைக்கேட்டு, இஃது யார்ஒலி என்று அறிய நாரதர் தன் வீணா கானத்தோடு அங்கு வந்து சேர்ந்தார்.

அவர் ஆசிரமத்திற்குள் யாரும் அறியாது உற்றுப் பார்க்கும்போது தொட்டில்களையும் பக்கத்தில் அன்புடன் அமர்ந்து தலாட்டும் அனசூயையும் கண்ணுற்று ஆச்சரியம் கொண்டு, அத்திரி முனிவர் அமரும் யாசக சாலைக்குச் சென்றார்.

இதுகாறும் தன்னை நாடி வராது இன்று எய்திய நாரதரைப்பார்த்து முனிவர் வேண்டிய உபசாரம்செய்து ஆசனத்தில் அமர்த்தினர். அமர்ந்த நாரதர் அத்திரியே என அழைத்து உமது உபசாரம் யாவும் நன்றாகயிருக்கிறது. இதன் பயனையும் பெருமையயும் நன்கு அறிந்து கொண்டேன். உமது பத்தினியாகிய அனசூயாதேவியானவள், தன் கணவன் தன்னைவிட்டகல்வது எந்நாளோ என்று ஏக்கமுற்றிருந்தாள். நீவிர் அவிடம் விட்டு அகலும் தறுவாயில், தருமநீதிகளைக்கூறி தமது எண்ணம் நிறைவேறியதென அகமகிழ்ந்தாள், மகிழ்ந்ததின் பயனாய் மூன்று மகமை ஈன்றெடுத்து அக்குழந்தைகளை அழகிய தொட்டில்களில் அமர்த்து தாலாட்டுகிறாள். மூன்றுவிதமான குழந்தைகள் தொட்டிலில் அயர்ந்து நித்திரை செய்வதைக்கண்டு வியபுற்றேனென்று கோபத்துடனும் வன்மையுடனும் கூறி அவ்விடம் பிரிந்தார்.

இவ்வை செவியுற்ற அத்திரி முனிவர் தனது தேவி பத்தினிக்கரசி என அறிந்திருந்தும், தான் மிகுந்த அறிவாளியாயிருந்தும், நாரதர் சொல்வன்மையால் யாகத்தை நிறுத்தி தனது உறைவிடம் உற்றார், அத்தோடு அவ்விடம் இருந்தவர்களும் அவரவர் இடம் புகுந்தனர்.

முனிவர்களே சொல்வன்மையினால் மயங்குவராயின் மற்றவரியல்பை செப்பவும் வேண்டுமோ? இவ்வலையில்

ஈடுபடாதவர் சுருங்கக்கூறின் இல்லையென்றே கூறலாம். தமிழ் புலமை வாய்ந்த அதிவீரராமபாண்டியர். தாம் இயற்றிய நறுந்தொகை என்னும் நூலில் "பொய்யுடைய ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலுமே மெய்போலுமே" என்றும் மொழிந்துள்ளார். இந்நீதி பற்றியே முனிவர், நாரதரின் சொல்வன்மையினால் மெய் என்று நம்பி மனம் தடுமாறினர்.

முனிவர் ஆசிரமத்தின் அருகாமையில் வந்து; "அடி அனசூயா" என்று அழைக்கவும், அடி என்ற வார்த்தையைக்கேட்டு அம்மையானவள் அச்சம் கொண்டாளெனினும், ஆவைக்கண்ட கன்றைப்போல் அகமகிழ்ந்து அடிபணிந்தாள். தம்முன் வணக்கத்துடன் கைகுவித்து நிற்கும் தேவியைப்பார்த்து பெண்ணே! நம் ஆசிரமத்தில் அமர்ந்திருக்கும் தொட்டில்களில்தூங்கும் குழந்தைகளின் வரலாற்றை விரைவாக கூறுவிடில் அகலிய தேவிக்கு அமைந்த ஆபத்து விளையும் என வெகுண்டார்.

தன் கணவன் இஃதுகாறும் கூறாத அடி என்ற அழைப்புக்குறியையும் அவரது மனப்பான்மையையும் கண்ணுற்று, தேவியானவள் யார் செய்த தீவினையோ இவ்வாறு நேரண்டதென வருத்தம் கொண்டாயினும், கணவனது கோபத்தை அகற்றுவது கற்புடைய மாதர்க்கோர் அழகென மதித்து குழந்தைகளின் வரலாற்றையும் மற்றச் செய்திகளையும் இதமாகக்கூறி, ஆறுக் கோபத்தைத் நீக்கினள்,

தனது பத்தினியின் தன்மையும் அறநெறியையும் கேள்வியுற்ற முனிவர் என்ன மோசம் செய்தோம்! துறவி

யாயும் ஞானியாயும் இருந்தும் என்ன பேதமையாயி விட்டேன்! தணிய தகுவது கோபமென அறிந்திருந்தும் யாது பயன்! அவையெல்லாம் சேற்றிலிட்ட அமுதம் போல் ஆனதே! "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீரவிசாரிப்பதே மெய்" என்ற தத்துவத்தை உணர்ந்திருந்தும், என்ன தீவினைக்கு ஆளாகி விட்டேன். ஹா! கேட்பார் வார்த்தை கேட்பதால் வரும் பயன் இஃதுவா! சொல்லுக்கு இவ்வளவு வன்மையும் உண்டா என்று பலவாறு கவலை கொண்டாராயினும், மனைவியின் மனஊக்கத்தையும் மாண்பமைந்த கற்பையும் கண்டு மனம் தேறி முன்போலவே இன்புற்று வாழ்ந்தார்,

---

# கணவரைக் காணாத் துயரமும் கண்டோர் கூற்றும்.

நாரதர் தம் காரியம் கைகூடியதென அகமகிழ்ந்து தேவிமார்களிடம் சென்றார். அவர்கள் தங்கள் கணவர் இதுகாறும் வராமையால், அனசூயையின் கற்பை அழித்திருக்கக்கூடுமென்று ஓர் பக்கம் ஆனந்தமும், மற்றோர் பக்கம் இன்னும் நம் நாயகர் வரக்காணவில்லையே! என்ன மோசம் நேர்ந்ததோவென ஆறாத்துயரமும் அடைந்தனர்.

இவர்களது நிலையை சற்று ஆராயுங்கால், உலகம் இன்பதுன்பங்கள் நிறைந்தது அதனால் இன்பம் வந்தென இறுமாப்புக் கொள்ளவோ, துன்பம் வந்தென துயரடையவோ வேண்டாமென்று மண்ணுலகத்தாருக்குப் புகட்டுகிறார்களோ எனத்தோன்றிடும்,

இத்தருணம் நாரதர் வருகையைக் கண்டதும் தேவிமார்கள் "எங்கள் நாதர் இதுவரையும் வரக்காணோம் ஆகையால் அனசூயையின் கற்பு அழிந்திருக்குமென எண்ணுகிறோம். திரிலோக சஞ்சாரியான உமக்கு தெரியாதிருக்குமோ" என்று கூற, நாரதர் நமக்கொன்றும் தெரியாது ஆயினும் வீணாநாதத்தால் வீற்றிருக்கும் இடத்தை ஒருவாறு பாம்பாட்டி போல பகர்வேனென விளம்பி அதன் நாதத்தை முழக்கினார்.

இங்ஙனம் நாரதர் வீணையை முழக்கிக்கொண்டு அம்மா! அவர்கள் இருக்கும் இடம் அறிந்தேன் அறிந்தேன் எனக்கூற, தேவிமார்கள் முனிவரே! அவாகள் எங்கே? என்ன வேலையில் அமர்ந்திருக்கின்றனர்? எப்போது வருவார் எனமிக ஆத்திரத்துடன் கேட்டனர். அதற்கு நாரதர் பின்வருமாறு கூறுகிறார். தேவிமார்களே! உங்கள் கணவர் ஓரேஇடத்தில் அயர்ந்த நித்திரை செய்கிறார்கள் அவ்விடத்தில் உங்கள் மாமியும் மாமனும் இருக்கிறார்கள். அதுஞானகான வனத்திலே எனறார்.

இதைக்கேட்டு அவர்கள் நீர் கூறியது சரியாயிருக்கலாம். ஆனால் எங்களுக்கு மாமன் மாமியார் கிடையாதே அவ்விதம் ஒருக்கால் இருப்பினும் மூன்று மாமன்மார்கள் வேண்டுமே. அதனால் உம்முடைய கூற்றில் சில ஐயமும் எங்கள் மனதில் தென்பட்டிருப்பதென எடுத்தியம்பினார்.

உங்களுக்கு ஏற்பட்ட ஐயத்தை யான் கூறிய இடத்தில் சென்று பார்த்து மெய்யோ பொய்யோவென திட்டப்படுத்துங்கள் என்று நாரதர் வீணையை முழக்கிக்கொண்டு பின்றும் கூறுகிறார். அம்மா! இன்னும் சொல்லுகிறேன்

கவனியுங்கள். ஓர் மரத்திலிருந்து பிரிந்து சென்ற மூன்று கிளைகளில் தொங்கவிட்டிருக்கும் தொட்டில்களில், உங்கள் கணவர்கள் குழந்தை வடிவாக நித்திரை செய்கிறார்கள் என்று கண்ட காட்சியை காணாதவர் போல் கழகினர்.

இங்ஙனம் கண்டதுபோல் கூறும் நாரதரைப்பார்த்து தேவிமார்கள் அவர்களை வருவிப்பது எங்ஙனம் முன் சொல்லிய உபாயத்தைப்போல் உயிர் பிழைக்க ஒன்று உணர்த்தவேண்டுமென்று மிகுந்த துயரத்துடன் கூறினார்கள்.

அதற்கு நாரதர் அம்மா! நீங்கள் மாறுவேடம்பூண்டு பூலோகத்தில் இருக்கும் ஞானகான வனத்திலேகி, அங்கு அமர்ந்திருக்கும் அனசூயாதேவியை அடிபணியுங்கள் பின் பார்வதி, லக்ஷிமி, சரஸ்வதி என்ற உங்கள் பெயர்ப் பெருமையை அகற்றி, அந்த அம்மையாரிடம் மாங்கல்ய தர்மம் கேளுங்கள். அந்த அம்மாள் உங்கள் கணவரைத் தந்து கவலையைத் தீர்ப்பாள், தராவிடில் நான் அங்குற்று உங்களை மகிழ்விக்கிறேன், எனக்கூறி மறைந்தார்.

மறைந்ததும், தேவர்களிடத்திலும் முனிவர்களிடத்திலும் சென்று நடந்த செய்திகளைக்கூறி நம் தாய்மார்கள் ஞாரண்யம் செல்வதைக் கவனியுங்கள் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

தேவிமார்களோ, நாரதர் கூற்றுக்கிணங்க ஞாரண்யம் போகும்போது, வருமத்தியில் தேவர்களும் முனிபுங்கவர்களும் கண்டு அம்மா! தேவியார்களே! இதுவும்

ஓர் செயலோ? இருக்கட்டும் இனி நீங்கள் உங்கள் அகந்
தையைத் தவிர்த்து எண்ணிய எண்ணத்தை முடித்து
வாருங்கள் என்று வினயமாகக்கூறி அனுப்பினார்கள்.

---

# கற்பரசியைக் காண்பதும் கற்பழிவதும்.

முத்தொழிலையும் முடிவு பெறச் செய்ய வன்மை
பொருந்திய மும்மூர்த்தியின் பத்தினிமார்களும் இதுவும்
ஓர் காலக்கொடுமையோ என எண்ணி, தங்கள் தங்கள்
உருவைமாற்றிக்கொண்டு அனசூயா தேவி இருக்கும்
ஆசிரமம் வந்தனர் முன்போலவே ஸ்திரி பத்தினியோ
அவர்களை உபசரித்து, யாதுகாரணம்பற்றி இங்கு வந்தீர்
உங்கள் கணவர் எங்கே? எனப்பகர, வந்தவர்கள் பய
பக்தியுடன் மாங்கல்ய தர்மத்துக்காக இவ்வாசிரமம் புகுந்
தோமெனக் கூறினார். இதைக்கேட்டதும் தேவியானவள்
அடங்காமகிழ்ச்சியோடு துஷ்டவிலங்குகளாலும், கொடிய
விஷஜந்துகளாலும், நிறைந்த இவ்வடவியில் என்னையும்
என் நாயகனையுமன்றி வேறு யாரையும் காண்பதரிது
அதிலும் இஃது ஓர் ஆசிரமம், இத்தன்மை வாய்ந்த
இடத்தில் புகுந்த நீங்கள், உங்களைப்போன்ற பெண்பா
லாகிய என்னிடம் இங்ஙனம் உரைப்பது உரியதா? அவ்
வாறு கேட்பினும் என்னால் அஃது இயலுமா? நீங்களே
நினைந்து கூறுங்கள் என்று சொல்ல, அவர்கள் பின்னும்
கூறுகிறார்கள்.

அம்மா! கற்புக்கரசியே! உங்களிடம் எங்கள் கணவ
ராகிய மும்மூர்த்திகளும் இவ்விடம் உள்ள தொட்டில்
களில் நித்திரை செய்கிறார்களென்று நாரதர் கூற, இவண்

வந்து இத்தர்மத்தை வினவினோம். எங்கள் வேண்டு கோளுக்கிணங்க, அவர்களைத் தந்து எங்கள் துயரை அகற்றுவிடில, அண்டங்கள் அனைத்தும் துன்பமடையு மென கூறினார்கள்.

இவ்வார்த்தைக்கு தேவி உடன்பட்டு தொட்டில்களை காட்டி, உங்கள் கணவரை எடுத்து உயிர் பிழையுங்கள் என உணர்த்தினள். யாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கி குழந்தைகளை எடுத்து தங்கள் தங்கள் உறைவிடம் பேக எண்ணினள்.

இவைதைக் கண்ணுற்ற கற்பரசியானவள். இவர்களா லன்றோ நமக்கு இடுக்கண் நேர்ந்தது. அதனால் அவர்களை இங்ஙனம் விடுவது சரியென்று என்ற எண்ணத்துடன் தாங்கள் கணவர்கள் என்னிலையில் என்னிடம் ஏகினர் களோ அந்நிலையில் அவர்களை ஆக்கவேண்டும் அல்லாடில் "வினைவிதைத்தவன் தினை அறுத்தது போல்" ஆகிவிடு மோ என மனதில் நினைத்து அக்கினி பகவானை தியானித் தாள்.

அவர் வந்ததும், "இப்பெண்களிடம் இருக்கும் குழந்தைகள் சுய உருவத்துடன் மின்னல்போல் அவர் கட்கு காட்சி கொடுத்து, முன்போல தொட்டில் தூங் கும்படிச் செய்யாய்" என்று அனசூயாதேவியானவள் கூற அவரும் அப்படியே செய்தார்.

தாங்கள் கைக்கொண்டு களிப்புற குழந்தைகள் தங் கள் கணவரல்லாது இருந்தமையால் இடிவிழுந்தாற் போல் பதறினார்கள். ஏனென்றால், சிவனை லெக்ஷ்மிதேவி யும் பிரம்மனைப் பார்வதி தேவியும், விஷ்ணுவை ஸரஸ் வதிதேவியும் எடுத்தாருள்ள கற்பழிவாலாகும். இதனால்

கணவனல்லானைக் கணவனாகப் பாவித்துக் கண்களித்தோமேஎன வெட்கமும்,ஐயமும் பூண்டு கற்பழிந்தோமெனக் கலங்கினார். மேலும் பொறுமையின் பயன் இதுவோ எனக் கருதினார்.

---

## முனிவர் வருகையும்,முயன்ற கருமம் முடித்தலும்.

இதனிடையில் நாரதர், இவர்கள் முன் தோன்றி நான் கூறியது மெய்ஞானி நினைத்த காரியம் முடிந்ததா? என்று தம் தாபத்தைக் கூறி தளர்வுற்றார்கள்.

இதைக் கேட்டதும் நாரதர், கவலை வேண்டாம் உங்களுக்கு நேர்ந்த குறையை நீக்கும் பொருட்டு, ஓர் சாந்தி செய்யவேண்டுமென்று அவர்களைப் பிரஞ்ஞாத தீர்த்தக் கரைக்கு அழைத்து வந்து அதன் மூன்று கோணிலும் ஹோமகுண்டங்கள் எடுத்தார். ஹோமத்திலிருந்து தோன்றிய ஹோமாக்கினியில் அவர்களை மூழ்கச்செய்து கற்பழிவை அகற்றினார்.

பின்னும் இத்துடன் உங்கள் எண்ணம் ஈடேறவில்லை. கணவனைக் காண்பதற்கு திருவாதிரை நோம்பு ஒன்று எடுக்கவேண்டுமென்று இயம்ப, அவர்கள் அவ்வாறே அந் நோன்பு எடுத்தார்கள். ஆகவே திருவாதிரை நாள் இவ் வூரில் ஓர் விசேஷ நாளாகும். அதிலும் மார்கழி மாதத்து திருவாதிரை நாளை ஓர் புண்ணிய நாளெனக் கருதி பற்பல இடங்களிலிருந்தும் ஆட்கள் தெரிசனத்துக்கு வருவதுண்டு.

இத்தீர்த்தம் இப்பொழுது தெப்பகுளம் என்ற பெயரோடு மத்தியில் அழகியதோர் மண்டபம் விளங்கப் பெற்று, இவ்வூர் ஆலயத்தின் வடபாகம் விளங்குகிறது இதில் சித்திரை மாதந்தோறும் தெப்பத்திருவிழா என்றவோர் திருவிழா நடைபெறுவதுண்டு.

திருவாதிரை நோன்பு முடிந்ததும், நாரதர் தேவியர்களை அழைத்துக்கொண்டு ஆசிரமத்தின் அருகாமையில் சென்றது, அவர்களை மறைந்திருகக அருளி, தான் மட்டும் தபோதனர் தங்கியிருக்கும் ஆசிரமம் சென்றார்.

---

# மூர்த்திகள் முத்தி பெற்றதும், மற்றோர் மகிழ்வுற்றதும்.

தனிமையாகச் சென்ற நாரதர், திடுக்கத்துடனே அனசூயாதேவியில்லாத தருணம் பார்த்து, அத்திரிமுனிவரிடம் சென்று கண்டார்.

அவனியிலுள்ளோரடையாத அதிர்ஷ்டம் பெற்ற அந்தண முனிவரே! என்னை ஆனந்திப்பித்து ஆதரிக்க அவாவுகிறேன். தாணுவும், மாலும், அயனுமாகிய முத்தொழில் புரிவோர் மனைவிமார்கள் முகவாட்டத்துடன் அதோ நிற்கிறார்கள். அவர்களின் வாட்டத்தை அகற்றி என்பேரில் நினைத்திருக்கும் வெகுளியை விரட்டுவீர். அவர்கள் கணவர் மூவரும் களிப்போடு, அதோ இருக்கும தொட்டிலில் அயர்ந்த நித்திரையில் அமர்ந்திருக்கின்றனர். மூர்த்தி வடிவாயிருக்கும் அவர்களை, சுய

உருவாக்கி சூரியன் உதிப்பதற்குள்ளே தந்து மகிழ்விக்க வேண்டுமென, தளர்ந்த உடலுடனும் நடுங்கிய மனத்துடனும் நாரதர் வேண்டினார்.

இந்த வேண்டுகோளுக்கிணங்கி அத்திரி முனிவர் உள்ளேபார்த்து, அன்புக்குறைவிடமே! அனசூயே! என்று அழைத்ததும் நாரதர் நவிலாமலே நகர்ந்து விட்டார்.

ஏனெனில், யான் இவ்வளவு இடர்களை இயற்ற பல்லோர் மனமும் பதறும்படிச் செய்தேன். அத்துடன் அத்திரியின் யாகத்தையும் அழித்தேன். இவ்வித இடுக்கண்களைச் செய்த என்னைத் தேவியானவள் கண்ணுற்றால் யான் படும்பாடு யாதோ? யான் அறியேன். முத்தொழில் புரியும் ஹரன் ஹரியோர்களுக்கே இத்துன்பமானால் எனக்கு ஏகுவதை எண்ணவும் கூடுமோ? அவர்களது துயரை மாற்ற அவர்கள் பத்தினிமார்கள் முயன்றார்கள். எனக்குண்டாகும் அன்னலைப்போக்க பெண்டீரோ, பிள்ளையோ அல்லாத ஏகாந்த வாசியாயிருக்கிறேன். மற்றோர் அன்பு பூண்டு ஆதரிப்பான் என்று நினைத்தால் என் பெயர் கேட்ட அளவில் மூவுலகத்தாரும் முடிந்தானோ முனிவன் என்று மொழிவார்களே ஒழிய, கனிந்து மனத்தினராய் காப்பார் அல்லையெனக்கருதியே நாரதர் பதறி ஓடினார்.

ஓடியதும், தேவிமார்களிடம் சென்று நடந்த செய்திகளைத் தெரிவித்து மறைந்தனர்.

இது இவ்வாறிருக்க, அனசூயாதேவியானவள் அக மகிழ்ச்சியுடன் அத்திரியின் முன்னே தோன்றினார்.

பக்கத்திலே பயபக்தியுடன் பணிந்து நிற்கும் தேவியைப் பார்த்து முனிவர் தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளை சுயம் பிரகாச உருவாக்கக்கடவாய் என்று வேண்ட கணவன் சொற்படியே பாத தீர்த்தமஹிமையால் குழவிகள் மூவர்களையும் அவரவர் வடிவத்திலாக்கினாள்.

தங்கள் கணவரைக் கண்டதும், மகவைப்பெறும் துயர் பெற்றெடுத்தாலகன்றிடும் தன்மைபோல் ஆசை கொண்டு தேவிமார்கள் மூவரும் அண்டையில் அமர்ந்தனர். இதைக் கண்டதும் முனிவர் தன் பத்தினியுடன் வலம் வந்த வண்ணமாகவே இருந்தார். இங்ஙனம் யாபேரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

---

# முடிவுரை.

மூவரும் ஒருங்கே காட்சி கொடுக்கும்படி இந்நகருக் கமைந்த நன்மையை எண்ணியும், தாணுமாலயனைத் தளர் வின்றித் தினமும் தியானித்தும் இக்கதையின் முடிவுரை கூற முயன்றேன!

மூர்த்திகள் மூவரும் தங்கள் பத்தினிமார்களுடன் அமர்ந்திருக்கும்பொழுது, தமக்குள்ளே ஓர் எண்ணம் கொண்டனர். நாம் இவ்வளவு காலம் குழந்தை போல கிடந்து, அவர்களை சொல்லாலும் செயலாலும் செயலற் றவர்களாக்கினோம். இனி அவர்களுக்குண்டாகும் துயரம் அருருமக்கோர், ஆண் மகவின்று நன்நாளில் நமனுக்களித் தோர் நிலையிலும் கொடியது என்று எண்ணி, நாம் இங்ஙனம் போவது தர்மமன்று ஆகவே, மூவர்களும் தங்கள் அம்சமாகிய சந்திரன், தத்தாத்திரேயன், துர்வாஸா,

என்ற நாமங்களையுடைய மூன்று குழந்தைகளை முனிவருக்குக் கொடுத்தருளி ஆசிர்வதித்தனர்.

பின்னர் முனிவர், பத்தினியுடனும் குழந்தைகளுடனும் சாஷ்டாங்கம் பணிந்து இது போன்ற தரிசனம் அடியேங்கள் அடையும் நாள் எந்நாள் என்று வேண்டினர். அதற்கு அவர்கள் மார்கழி மாதம் அசுவதி நக்ஷத்திரத்தன்று அதிகாலை கருடரூபமாய் வந்து பார்த்துக் கொள்ளுங்கள் என்று ஆசிகூறி அவ்விடம் விட்டு அகல எண்ணினர்.

ஆகவே, இவ்வூரில் மார்கழிமாதம் ஐந்தாம் திருவிழா இந்த ஆகமம் ஒட்டியே நடக்கிறது.

இச்சரித்திரத்தைப் படிப்போரும் கேட்போரும் இன்னலின்றி இம்பருலகம் **ஏக இறைவனை** இறைஞ்சிகிறேன்.

## அன்பின் வாழ்வே இன்ப வாழ்வு.

முற்றிற்று.

# பக்தியின் மாண்பு.

## படிதி 2.

## கௌதமர் சாபமும், தேவேந்திரன் துயரமும்.

நம் ஹிந்து புராணங்களில் உலகங்களை மேலுலகம் பூவுலகம் கீழுலகம் என்று மூன்று முக்கிய பாகங்களாக வரையறுக்கின்றனர். அதில் மேலுலகத்தை இன்பர் உலகம் என்றும், தேவர் உலகம் என்றும் வழங்குவதுண்டு. இத்தேவர் உலகத்து மன்னனை தேவேந்திரன் என பெருமை பாராட்டிப் புகழ்வார்.

மேலும் அவரைக் கீழ் திசைக்கு அதிபன் என்று வரையறுத்துக் கூறுவாரும் உளர். இவர் எவ்விடத்துக்கு அதிபராயிருப்பினும், தேவர்களென்றும் தேவேந்திரனென்றும் புராணங்களில் பல இடங்களிலும் புகன்றிருப்பதைக் காணலாம். ஆகவே தேவேந்திரன் என்று ஒருவர் உண்டு என்று நம் முதாதியோர் சொல்லுக்கிணங்க ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

ஒருக்கால் இவர் கௌதம பத்தினியாகிய அஹல்யா தேவியிடம் ஆசைகொண்டார் மாற்றான் பெண்டீரை மணக்கக் கோருவது, கொடிய பாவங்களிலொன்றென, காம வெகுளியால் அவருக்கு தென்படவில்லை. இதற்காக பல நாள் முயன்றும் பயனற்றன. ஒருநாள் தன் எண்ணம் ஈடேற நள்ளிரவில் ஓர் சேவர்கோழியின் வடிவெடுத்து கௌதமர் ஆசிரமத்தில் வந்து கூவினார்.

வைகறைப் பொழுதாயினவென்று வேதியர் திடுக்கிட்டு ஸ்நானத்துக்காக வெளிச்சென்றார். உடனே தேவேந்திரன் உள்ளே புகுந்து, அகல்லியை மணந்து கொண்டான்.

முனிவர் கங்கையை அணுகியது, அதன் சித்திரையைக்கண்டு நேரமாகவில்லையென ஆசிரமத்தை அணுக இந்திரன் பூனைவடிவாக புறம் சென்றான. பூனையை இந்திரன் என்று இருடி ஞான திருஷ்டியால் அறிந்து, உடல் முழுவதும் பெண்குறியாகப் போகக்கடவதென கூறியதோடு அகல்லியா தேவியையும் கல்லாய் சமையக்கடவாய் என்று சாபம் செய்தார்.

இதைக்கேட்டு நடுக்கங்கொண்ட தேவி அடிபணிந்து அடியேன் இவ்வுரு எடுப்பது எந்நாளென்று வடித்தகண்ணீருடனும் மடித்தவாயுடனும் வேண்டினாள். அதற்கு முனிவர், அறியாமற் செய்த உன் பிழைக்காக, ஓ நகாலத்தில் தசரத புத்திரராய் அவதரிக்கும் ஸ்ரீ ராமபிரான் திருவடிகள் தீண்டப்பெற்றதும் முக்தியடைவாய் என்றார்.

பின் சாபத்தினால், வெளிவர வெட்கம் பூண்ட இந்திரன் முனிவரின் பாதத்தில் தண்டனிட்டு, சிறியோன் அறிவின்றிச் செம்த பிழையைப் பொறுத்து ஓர் ஆறுதல் மொழி தரவேண்டுமென்று இரங்கினான். முனிவரோ மனமிரங்கி மும்மூர்த்திகளும் ஒருங்கே இருக்கும் தருணம் சென்று பூஜித்தால் புனித உடம்பாவாய் என்று, உகந்த மொழி கூறி அனுப்பினார்.

இதனால் தேவபதி ஒருவாறு தேறுதல் அடைந்தாலும் அதுகாறும் நாம் வெளிவருவது எங்ஙனம்? அந்

நிய பெண்டீரை ஆசிப்பதால் வரும் பயன் இதுவோ? அரசராயிருந்தும் தேவபதியாயிருந்தும் யாது பயன்? காமத்தால் இவ்வித இடுக்கண் பெற்றேனே, வதை செய்யாமல் விட்டதே நம் பாக்கியமென நினைத்து, தனது அரண்மனையின் உப்பரிகையில் சென்று உடம்பைப் புதைத்து பஞ்சணையில் படுத்துக்கொண்டான்.

இதை அறிந்த நாரதர் இந்திரனிடம் சென்றார். நாரதரைக் கண்டதும், அடிபணிந்து நடந்ததைக்கூறி அடியேனது அகத்துயரை அகற்றித் தாவேண்டுமென்று இரங்கினர். அதற்கு நாரதர் இசைந்து அங்கிருந்து மறைந்தார்.

---

# நாரதர் கூற்றும் அரசின் வரிசையும்.

ஞானகான வனத்தில் வசிக்கும் அத்திரிக்கு அருள் கொடுத்து மும்மூர்த்திகள் மறைய உன்னுகையில் நாரதருக்கு தேவேந்திரன் கூறியது ஞாபகத்தில் வர, உடனே அங்கு சென்று அவர்களை அடிபணிந்தார். வணங்கிய நாரதரைப்பார்த்து யாது விசேஷமென மும்மூர்த்திகள்கேட்டனர். அதற்கு நாரதர் தேவரீர்களே தேவபதி தனக்கு நேர்ந்த தாபத்தால் மிக வருந்துகிறான். அவன் பேரில் கருணைகூர்ந்து, கௌதமர் கூற்றுக்கிணங்க அவனது துன்பத்தை துடைக்கவேண்டுமென வேண்டினர்.

இதன் அருகாமையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அத்திரி முனிவரும் கீழ்வருமாறு கூறினர். "யான் ஹிமய மலையில் செய்த யாசகசாலையில் வைத்து, அவனைக்கண்டதும் அளவிலா வருத்தங்கொண்டேன். அதனால் அவனது

துன்பத்தை அகற்றி ஆதரிக்கவேண்டுமென்று'' நாரதர் சொல்லுக்கு இசைந்து கூறினர்.

இவ்வார்த்தைகளைக்கேட்டதும் மூவரும் சம்மதித்து இந்திரனை அழைத்து வருப்படி நாரதரை அனுப்பிவிட்டு பிரஞ்ஞாத தீர்த்தக்கரையில் தென்பக்கத்துள்ள அரச மரத்தடியில் வந்து அமர்ந்தார். இவர்கள் தங்கியது எவ்வாறெனில்:—

மூலதோ பிரம்ம ரூபயா
மத்தியதோ விஷ்ணு ரூபிணே
இகர தச் சிவ ரூபாய்
விருக்ஷராஜாயதே நம

என்ற தன்மையில் ஆயிருந்தது. இதனுலேதான் இம்மரத்திற்கு வரிசையும் இம்மந்திரம் ஏற்பட்டது. தவிர, இதை அசுவஸ்தமரம் என்றும் பெருமைபாராட்டி புகல்வார். ஆனல் இம்மரம் மற்ற மூன்று யுகங்களிலும் துளசி—வில்வம் சரக்கொன்னை என்ற வடிவாய் முறையே மாறிவிடுகிறது. ஆகவே இக்கலியுகத்தில், சரக்கொன்னை வடிவில் இம்மரப்பட்டு நிற்பதை இவ்வூர் ஆலயத்தில் இன்றும் கண்டு மகிழலாம். இதற்கு கொன்னையடி என்று இப்போது வழங்குகிறார்கள்.

---

# இந்திரன் வருகையும் நந்திதேவரின் மறுப்பும்.

தம் அரசருக்கு நேர்ந்த ஆறுத்துயரால் கவலையோ டிருக்கும் தேவர்கள் வீதிகளைக் கடந்து சென்ற நாரதர் மனவாட்டத்தோடு மஞ்சத்தில் அமர்ந்திருக்கும் மரத்து

வரனைக் கண்டதும் அவள் அடங்கா வருத்தத்துடன் அவரடி பணிந்து ஆசனத்தில் அமர்த்தினாள். உடனே நாரதர், வருத்தம் வேண்டாமென நடந்த நிகழ்ச்சிகளை நவின்று ஞானாரண்யத்துக்கேகும்படி கட்டளையிட்டு அங்கிருந்து அகன்றார். இது கேட்ட இந்திரன் மிகுந்தமகிழ்ச்சியுடன் ஐராவமென்ற தன்யானையை முன்னே நடத்தி ஆறு குதிரைகளை பூட்டியதும், அலங்காரம் அமையப் பெற்றதுமான பொற்றேரின் மீது ஏறி நாற்புறமும் படைகள் சூழவும் பற்பலவாத்தியங்கள் முழங்கவும் பிரஞ்ஞாத தீர்த்தத்தின் வடபாகம் வந்து இறங்கினான்.

அங்கே தனதுதேரையும் படைகளையும் நிறுத்திதான் மட்டும் ஐராவதத்தோடு பிரஞ்ஞாத தீர்த்தக்கரையில் வந்தான், அரசமரத்தண்டையில் போகும்போது வழியில் நின்ற நந்திதேவர் மறுத்தார். இந்திரன் இறங்கியும் இயலவில்லை. நந்திதேவரே உன் பெருமையான வருகையால் பயனில்லை. குலகுருவின் அருள் பெற்றாலன்றி அவர்களை காணமுடியாது என்றுகூறி அவனை அனுப்பிவிட்டார்.

இந்திரன் தேர் முதலியவைகளை தங்கவைத்த இடம் தேரூர் என்ற பெயரோடு வழங்குகின்ற ஓர் ஊர் இதன் வடபாகம் இருக்கிறது. மேலும் அவரை மறுத்த நந்திதேவரைக்கோபுரவாயில் பக்கத்திலே இன்றும் காணலாம்.

---

## வரை ஏருவதும் வரம் பெறுவதும்.

இந்திரன் நந்திதேவரிடம் எவ்வளவோ கெஞ்சியும் எண்ணம் ஈடேறாததால், கீழ்பக்கம் தோன்றும் மலையில்

சென்று தன்குலகுருவாகிய பிருகஸ்பதியை நினைத்து தவம் செய்தான். தவத்துக்காக அம்மலையில் ஓர் குளமும் குழித்தான். தபத்தைக் கெடுக்க ஸப்த கன்னியர்கள் வந்து தம்மால் இயன்ற முயற்சி செய்தனர். அஃதுபயன் படவில்லை முடிவில் தபோ நிலையின் மஹிமையை அறிந்த பிருகஸ்பதி இங்கு வந்தனர் மருத்துவான் மனம் பூரித்து அவர் முன் அடிபணிந்து நின்றான்.

உடனே பிரகஸ்பதி இந்திரனைப்பார்த்து இவ்வாறு கூறினர். "தேவபதியே! நீ நினைத்த காரியம் தடையில்லாமல் முடிவுபெற விநாயகரையும் நந்திதேவரையும் ஒருங்கே பூஜிக்க வேண்டும். பிறகு அவர்கள் தங்கியிருக்கும் அரசமரத்தையும் பூஜித்து அம்மரத்தின் எதிராக ஓர் நெய்க்கொப்பரையில் நெய்விட்டுக்காய்ச்சி, அதில் இறக்கி பஞ்சாக்ஷர மந்திரத்துடன் ஆயிரத்தெட்டுதடவை அச்சமின்றி மூழ்கவேண்டும். இங்ஙனம் நீ செய்வாயானல் உனது பக்தியின் மாண்பைக்கண்டு, கடவுள் ஸந்நித்தியமாகி உனது உடம்பைப் புனிதமாக்குவார்" என்று கூறி ஆசீர்வதித்து மறைந்தார்.

இங்ஙனம் மருத்துவான் தபம் செய்த மலை மருந்துவாமலை என்ற பெயரோடு இவ்வூரில் கீழ்த்திசையில் காணலாம். அங்கே தேவேந்திரன் தபம் செய்த தேவேந்திரன் பொத்தையும், தேவேந்திரன் சுனையும் உண்டு. மருந்துவகைகள் பல இம்மலையில் இருப்பதுபற்றி மருந்துவாழ்மலை என மாறுபெயர் புனைந்து கூறுவாரும் உளர். சித்தர்கள் தபமிருக்க வந்ததால் சித்த சைலமென்றும் இதை அழைப்பதுண்டு.

# கோட்டாறும் கொடியசாபமும்.

வரம்பெற்ற வானேந்திரன் வந்து நதியை பூஜிக்க நினைத்தான். ஆனால் நதியில் ஸ்நானம் செய்து பூஜிப்பதே புண்ணியமெனக்கருதி, தனது யானையிடம் மலையில் சென்று போதுமான ஜலம் கொண்டுவரக் கட்டளையிட்டான். உடனே, யானை வடதிசையை நாடிச்சென்றது. அந்த மலையை அணுகி, இரண்டாய்ப்பிளந்து உட்பக்கம் இருந்த ஊற்று நீரை தன் நான்கு கோட்டுகளாலும் தரணியைக் கிளைத்து அதன் வழியாக அமரபதி அமரும் ஆரண்யத்தில் கொண்டு வந்து சேர்த்தது. பின் தேவேந்திரன் கட்டளையால் அதைக்கடலில் கொண்டு சேர்த்தது,

இதனால் வரண்டிருந்த ஞானகாரண்யம் முழுவதும் நீர்வளம் பொருந்தி செழிப்புற்றதால், அத்திரி முனிவருக்கு அடங்கா மகிழ்ச்சி ஏற்பட்டது இத்துடன் இந்நதி தீரம் முழுவதும் நஞ்சைப்பயிர்களுக்குத்தகுதியாயி நஞ்சை நாடெனப் பெயர் வழங்கியது. இப்பெயர் விளங்கும்படி யானை கொணர்ந்த இந்நதியை தந்தநதி என்றும் கோட்டாறு என்றும் அழைத்து வருகிறார்.

இவ்வாறு அரும் முயற்சியால் ஐராவதமானது நதியைக்கொண்டு வரும்போது, அதன் ஓர் கொம்பு முறிவுபட்டது. இந்த வருத்தத்துடனும், களைப்புடனும் பிரஞ்ஞாத தீர்த்தத்தின் மேல் பக்கம் ஓர் அரசமரத்தடியில் படுத்துக்கொண்டது. சற்று நேரம் பொறுத்ததும், தன் துதிக்கையால் அம்மரத்தின் ஓர் கிளையை ஒடித்தது. இக்கிளையோ அருகில் தபம் செய்து கொண்டிருந்த வேதவியாசர் மேல்பட்டது உடனே வியாசர் தனக்கிடர் செய்தவன் கல்லாகப்போவதென சாபமிட்டு அங்கிருந்து அகன்றார்.

கோடு + ஆறு = கோட்டாறு. இக்கோட்டாறு பழையாறு என்ற பெயரோடு இதன் அருகாமையில் இருக்கிறது தவிர கோட்டாறு என்ற ஓர் ஊரும் உண்டு. இது உற்பத்தியாகும் மலையை இராண்டாம்வரி மலையெனவும் கூறுகிறார்கள் மேலும் யானைப்பாறையென்ற, பெயரோடு யானைவடிவமாகிய ஓர் பாறையும், அதன் பக்கத்தில் வேத வியாசநாயகர் என்ற ஓர் ஆலயமும் தெப்பக்குளத்தின் மேல் பக்கம் பார்க்கலாம்.

---

## முனிவர்கள் ஏக்கமும் முன்னூற்று நங்கை தோற்றலும்.

இஃது இவ்வாறிருக்க இந்திரன், தன்யானைகொண்டு வந்த ஜலத்தில் ஸ்நானம்செய்து நந்திதேவரையும் விக்னேசுவரையும் ஒருங்கே தியானித்து அவர்களது அன்பை பெற்றான். பின் தன்குலகுரு கூறியவாறு அரசமரத்தை வலம் வந்து பூஜித்து அதன் எதிராக, தான் இறங்கி மூழ்கும்படியான வர்ப்பு ஒன்று அமைத்து, அதில்போதுமான நெய்விட்டு பொங்க வைத்தான்.

பக்தியின் மாண்பால் பாமரை நினைத்து பஞ்சாக்ஷரம் உச்சரித்து அச்சமின்றி அகம் தாவி ஆயிரத்தெட்டு தடவை மூழ்கினான்.

அந்தோ பக்தியின் பெருமையை பகரவும் கூடுமோ? இந்திரனுக்கு எள்ளளவேனும் உஷ்ணம்தாவவில்லை ஆனால் தேவர்களும் முனிவர்களும் வெப்பத்தின் வேவால் உயிர் போயிற்றென ஏங்கி இந்திரன் அமரும் இச்சுசீந்திரம் வந்து அடங்கா ஆச்சரியம் கொண்டனர். கடவுளைத்

தியானித்து கவலையன்றி நெய்யில்மூழ்கிக்கொண்கிருக்கும் தேவபதியைக் கண்டதும் இவர் தேவபதியோ என ஏக்கமுற்றார்கள்.

நெய்யில் மூழ்கியும் கடவுள் ஸானித்தியமாகாததால் அக்கினியை வளர்த்தி அதிலும் மூழ்க வேண்டுமென அமரபதி எண்ணினன். இதற்கு சாக்ஷிகளாக துர்க்கா தேவியும் அவ்வம்மையாருடன் முக்கியமான முன்னூறு தேவர்களும் இருந்தனர்.

இத்துர்க்காதேவியை, முன்னூற்று நங்கை என்ற பெயரோடு இவ்வூர் தெப்பக்குளத்தின் வடபக்கமிருக்கும் ஆலயத்தில் கண்டு தரிசிக்கலாம்,

# சாபமுத்தியும் சுசீந்திரமும்.

இத்தருணம் மும்மூர்த்திகளும் இந்திரன் பக்கத்தில் அணுகி அமரலோகத்து அதிபதியே! அன்னிய மாதரை ஆசித்தால் அடைத்த துன்பத்தை அறிந்தீரா? ஆயினும் உன் அன்பான பக்தியால் அகமகிழ்ந்து இவண் வந்தோம் உன் உடம்பு புனிதமாயாகக்கடவாய் என்றுகூறி அவனது பூஜையை என்றும் அடையவிரும்புகிறோமென்று சொல்லி அவ்விடம் இருந்து மறைந்தார்கள்.

இவர்கள் கூற்றுக்கிணங்க, இந்திரன் இச்சுசீந்திரத்தில் மும்மூர்த்திகளும் அடங்கிய ஓர் ஜோதி ரூபமாகிய சிவலிங்கம் பிரதிஷ்டித்து இன்றும் இவ்வாலயத்தில் பூஜை செய்து வருகிறார்.

இதனால் ஆலயத்தில் அர்த்தசாம பூஜை இல்லை. மேலும் இந்த சிவலிங்கத்துக்கு நாள்தோறும் நடத்தும் அபிஷேகத்தில் சற்றேனும் நமக்கு காணமுடியாது. அத் தீர்த்தம் பாய்வதற்குரிய கோமுகியும் இங்கு இல்லை. அர்த்தசாம பூஜை அமராதபதிக்கானதால் இன்று மாலை பூஜை செய்தவர் மறுநாள் காலையில் நடை திறக்கக்கூடாது ஆகவே ஆலயத்தில் பூஜை செய்வதற்கு இருவர் அமைந் திருக்கின்றனர். காலையில் நடைதிறக்கும் போது அகம் கண்டது புறங்கூறேன் என்று வாக்குறுதி செய்தே வா யில் துறக்கவேண்டும். இவர்கள் செய்வரம் பெருமனம் இருஞாலக்கோடு என்று பெருமை பொருந்திய மடங்களி லுள்ள மறையவர்களாகும்.

இங்ஙனம் இந்திரனது உடம்பு பக்தியால் புனிதமா னது இவ்விடத்தே ஆகும் ஆகவே இதற்கு **சுசீந்திரம்** எனப்பெயர் வழங்கியது,

சுசி + இந்திரன் = இந்திரன் சாபம் நீங்கி சுசியான இடம். இவருடைய பிரதிஷ்டையை மூலஸ்தானம் என்று இப்போதும் இயயபுகிறார்கள். மேலும் அவர் நந்தியையும் விக்னேசுவரையும் ஒருங்கே தியானித்தால் ஆலயத்தில் இந்திர விநாயகர் என்று ஓர் விநாயகர் கோவிலும் அவர் முன் நந்தி தேவரையும் பார்க்கலாம்.

இந்திரன் நெய்யில் மூழ்கி புனிதமாகிய இவ்வூர் ஆல யத்தில் தீங்கு செய்தோர் நெய் முக்கவேண்டும் என்ற ஓர் வழக்கம் வெகுகாலமாக நடந்து வந்திருந்தது. கூஷேத்ர A. D. 1839 முதல் 1857 வரையில் 18 வருஷகாலம் பக் தியுடன் ஆண்டு, வஞ்சி நாட்டை வளம்பெறச்செய்து சுக

பதம் அடைந்த சுவாதி திருநாள் ராமவர்ம மன்னரின் அரிய மனத்துக்கிணங்க அழித்துவிட்டது.

இவ்விதம் பேர்போன இவ்வாலயத்தில் பக்தி வைப்போர் இகத்தில் இன்பம் அடைந்து முக்தியடைவார் என்பது திண்ணம்.

## பக்தியின் மாண்பே பாரதர் மாண்பு.

முற்றிற்று.

# பொது.

பல்வகை மரங்களால் நிறைந்த இக்கானகம் வழியே நடந்து செல்லும் ஓர் ஆயர் மகளிர்க்கு, மூங்கில் எப்போதும் இடரியற்றியே வந்தது! இதனால் அவள்கொண்டு போகும் தயிர் பால் முதலியன அமைந்த மண்பாண்டங்கள் உடைவுபட்டே வந்தன. நாள்தோறும் நடைபெறும் இத்துன்பத்தை அகற்ற, ஒருநாள் அவள் தன் கணவனோடு முறையிட்டாள். இதைக்கேள்வியுற்ற அவள் கணவன், தன் தோழர்களோடு இவண் வந்து இந்த மூங்கிலை முறிக்க, அதிலிருந்து இரத்தம் பெருவிட்டன. இதனால் அவர்கள் ஆச்சரியமுற்று ஜோதிலிங்கமேயென உணர்ந்து ஆனந்தம் அடைந்தனர். இது முதல் இவ்வூரில் ஆலயம் ஏற்பட்டனவென்று கூறுகிறார்கள்,

ஆலயத்தில் கடவுளை ரூபத்திலும் அரூபத்திலும் ரூபா ரூபத்திலும் அமைக்கலாமென்பது முற்றுமுணர்ந்த முனிவர் கொள்கை இதை மேற்கோளாக வைத்து, இவ்வாலயத்தைப் பார்ப்போமானால், இந்திரன் சபை அல்லது சித்திரை சபையில் அரூபத்திலும் தேவேந்திரன் பிரதிஷ்டித்த மூலஸ்தானத்திலும் கொன்றையடியிலும் அத்திரி முனிவர் பிரதிஷ்டித்த கைலாசத்திலும் ஜோதிலிங்கமானது ரூபா ரூபத்திலும் இலங்குகிறது.

மேனும் பாண்டி நாட்டை பெருமையுடன் அரசாக்ஷி செய்துவந்த, திருமலைநாயக்கரது திருவருளால் அமையப் பெற்ற திருமாலும் நாஞ்சிக்குறவனது நன் முயற்சியா லாக்கப்பெற்ற முருகக் கடவுளும், இராமர், வீரபுத்திரர் ஹரிஹரபுத்திரர் முதலிய ஏனய பிரதிஷ்டைகளும் ரூபத்திலேயே அமையப்பெற்றனவாகும்.

தவிர ஆன்ற பக்தியோடு ஆலயத்தில் வருபவளும், வேளாள மரபில் உதித்தவளும், தாழக்குடி என்னும் தாழ்வில்லா ஊரில் தோன்றியவளும் அறம் வளர்த்தாள் என்னும் பெயரினை உடையவளுமான ஓர் பெண்மணி யை கடவுள் விரும்பி கேட்டதும் இவ்வாலயத்திலேயே என்றால் வேளாளர்களுக்கும் இவ்வாலயத்திற்கும் உள்ள சம்பந்தத்தைச் சாற்றவேண்டியதில்லை.

இதனாலே இவர்கள் **"அறம் வளர்த்தம்மன்"** என்ற பெயரினையுடைய ஓர் ரூபபிம்பம் பிரதிஷ்டித்து, மாசி மாதந்தோறும் திருமன்றல் நடத்தி வருகிறார்கள். இத்தருணம் தேரூர், இரவிபுதூர் என்னும் ஊர்களிலி ருக்கும் அக்குடும்பத்தார்கள் குதூகலத்துடன் அம்ம னுக்கு பட்டு படுக்கை முதலியன கொண்டு வருவது பார்க்கவேண்டியதோர் காட்சியாகும்.

இத்தன்மை வாய்ந்த இதன் பெருமையைக்கேள்வி யுற்ற பெரியார் ஒருவர் இவண் வந்து மிகுந்த திரவியம் செலவுசெய்து நன்னிலையில் ஆக்கியதுண்டு. அவரே தெற்கு மண்டபத்து போற்றி என்னும் தயாள சீலர். அவர் பல மண்டபங்களும் மற்றும் செய்ததோடு, முன் பக்கம் ஓர்

அழகிய சிறுமண்டபமும் கட்டினார். ஆகவே அவரது உருவம் வாயிலில் விளங்குகிறது.

இத்துடன் திருவாடுதுறை, ஆதீனத்தார்களும், சோழ அரசர்களும் பற்பல பெரும் தகையார்களும் தங்கள் தங்கள் பக்தியை நிலைநாட்டியிருக்கிறார்கள் என்பது இங்கேயுள்ள கல்வெட்டுகள் சான்றாகும்.

இதில் மிகுந்த பக்தி பூண்டொழுகியவர் பிரம்மஸ்ரீ வட்டப்பள்ளி ஸ்தானிகர் ஆதலால் அவர்களே இவ்வால யத்திற்கு பொறுப்பிடையவர். இதோடு ஆலயத்தில் நடைபெறும் சில சட்டங்களுக்கு தெற்கு மண்டபப் போற்றி அவர்களும் பொறுப்புண்டுவெனப் புகலவேண் டியதில்லை. இங்கேயுள்ள மண்டபங்களினுடையவும் பது மைகளுடையவும் சித்திரவேலைகளைக் கவனிக்குங்கால் பார தியர்களாகிய நம்மவர்களுக்கு ஓர்பெருமையை அளிக்கும் என்பதற்கு சற்றேனும் ஐயமில்லை இங்ஙனம் நம்மவர்க ளுக்கு பெருமையையும், பக்தியையும் அளிக்கும் இவ்வா லயத்தில் பஞ்ச பாண்டவர்களில் ஒருவரும் கண்ணபிரா னின் அன்புக்குறைவுடையோரும் ஆகிய அர்ஜுனபிரான் வந்து ஓர் பதக்கம் காணிக்கையாக வைத்தார் என்றும் பரசுராமர் தன் பாவத்தை தீர்த்தார் என்றும் கழறுவது ஓர் பெருமையன்று.

நாட்டார்களும் யோகக்காரர்களாலும் மற்றும் பொறுப்புடன் போற்றப்பட்டு வந்த இந்த ஆலயத்தை சேர பரம்பரையில் தோன்றியவளும் சீர்மையாகிய குணங் கள் அமைந்தவளுமாகிய ராணி லெக்ஷ்மிபாய் என்ற அரச உத்தமி தமது ஆளுகையில் அமர்த்திக்கொண்டனர்.

தற்போது, அப்பரம்பரையில் அவதரித்தவரும், பஞ்ச மென்புதை பறக்கச்செய்து வஞ்சிக்கோர் அணிகலனாய் விளங்குபவரும், முடிதரித்த மூவேந்தர்களிலும் பெருமை பெற்ற சேரமன்னர்களின் சென்னியில் சிறப்புற்றமைபவரும் ஆகிய சித்திரை மன்னரின் நற்சிந்தைக்கிணங்க நலம் பெற்று இலங்குகிறது.

**சித்திரை இத்திரை நீடூழி வாழ்க!**

முற்றிற்று.

# கன்னிமாகுமரி

யான் சுசீந்திர ஸ்தல மஹிமை எழுதி முடிந்ததும் சில பெரியோர்கள் கன்னியாகுமரியின் ஸ்தல மஹிமையை இத்துடன் கூறவேண்டுமென விரும்ப, அதைபிட்டும் சுருக்கமாக அங்குள்ள பெரியோர்களுடன் இருந்து கிடைத்த அறிவால் கூறிக்கொள்ளுகிறேன்.

முற்காலத்தில், மூகாஸுரன், வாணாஸுரன் என்ற இருவர்கள் இம்பர்களை பலவாறு இடுக்கண் இயற்றி வந்தனர். இதை பொறுக்க முடியாத தேவர்கள் பல பெயர்களிடத்தும் தங்கள் குறைகளைக்கூறியும் பயனற்றமையால் காசி விசுவாச நாதரை அடைக்கலமாக அடைந்தனர்.

விசுவாசர் இவர்களுடைய இன்னலைப்போக்கி இன்பம் அடைவிக்க தனது சக்தியாகிய காளியை கல்கத்தா என்றுகூறும் காளி கட்டத்திலும் அம்சமாகிய பகவதியை கன்னிகை உருவாக தெக்கணமாகிய இவ்விடத்திலும் அனுப்பிவிட்டார். இங்ஙனம் மஹேசுவரி கன்னிகையாகித் தங்கிய தலமே **கன்னிமாகுமரியாகும்.**

இன்னும் அங்கு நடைபெறும் புரட்டாசி மாதம் நவராத்திரியன்று அம்பாள், உச்சை சிரவஸ் என்னும் அமராபதியினது அசுவத்தில் அமர்ந்து அமர்களம் அடைவதை **"அமபுசாத்தல்"** என்று அழைத்து ஓர் விழாவை நடத்துவதுண்டு.

இத்தேவியின் திவ்ய அழகைக்கண்டு திருமூர்த்தியானவர் மணம் செய்ய மனதில் நாடி இக்கன்னிமாகுமரிக்கு வந்தனர். இதை அறிந்து தேவர்களும் முனிவர்களும் இங்கு வந்து கூடினார்கள். இவர்கள் யாபேரும் களிப்புடன் அமர்ந்த இடம் கன்னியம்பலமாகும். இக்கூட்டத்தில் வைத்து மும்மூர்த்தியானவர் தங்கருத்தை வெளியிட ஏனையோர் அதற்கு ஒருவாறு ஒப்புக்கொண்டார்கள்.

ஏனெனில் கன்னிகாதேவிக்கு கல்யாணம் நடக்குமாயின், சக்திகுறைந்து அசுரர்களை அழிக்க முடியாதே என்ற வருத்தமானது தேவர்களுக்கு இருப்பினும், திருமூர்த்திகளது திருவாக்கைத்தட்டுவது தவறென நினைத்தே ஒருவாறு ஒப்புக்கொண்டார்கள்.

இது இவ்வாறிருக்க, திருகால ஞானியாகிய நாரதர் இவண் வந்துற்றார். அவரிடம் அமரர்கள் நடந்த நிகழ்ச்சியைக்கூற, அவர் மன்றல் நடவாமலிருக்கும் பொருட்டு திருமூர்த்திகளிடம் பகவதியம்மனைப் பாணிக்கிரகணம் புரிய கண்களில்லா தேங்காயும், காம்பிலா மாங்காயும், நரம்பிலா வெற்றிலையும, கணுவில்லாக் கரும்பையும் இதழ் இல்லாத புஷ்பமும் கொண்டுவர வேண்டுமென்று கூறினார். இதற்கு திருமூர்த்தி உடன்பட்ட உள்ளத்துடையவராய் அங்கிருந்து அகன்றார். இத்துடன் நாரதரும் மறைந்தார்.

தேவர்களோ கலியாணத்திற்குரிய உணவு முதலியவைகளை இக்கன்னியாகுமரியில் தயாரித்தார்கள்.

மும்மூர்த்தியோ, தனது சக்தியின் ஸானித்தியத்தால் நாரதர் கூறிய ஐவகைப் பொருளையும் எடுத்து நள்ளிரவில் இச்சுசீந்திரத்திலிருந்து ஒரு நாழிகை தூரம் சென்றதும், நாரதர் திடுக்கிட்டு சேவற்கோழியாக வந்து கூவினார். கோழியின் குரலைக்கேட்டதும், திருமூர்த்திகள் வைகறை பொழுதாயின. இனிபோதை வழுக்கு என நினைந்து திரும்பிவிட்டார்.

இங்ஙனம் திரும்பிய இடம் ஓர் பாறையில் வைத்தானதால் அப்பாறையை வழுக்குப்பாறையென வழங்கி வருகிறார். இஃது சுசீந்திரத்தில் நின்றும் ஒரு மைல் கிழக்காக இருக்கிறது. இதில் கோழியின் கால் தடமும் திருமூர்த்தியின் திருவடியும் தென்படுகிறது. கன்னியாகுமரி சுசீந்திரத்தில் கிழக்கு திசையிலுள்ள கடலோரத்தில் இருக்கிறது.

மணக்கோலம் அடைந்த தேவியானவள் வெ[illegible]நேரமாகக் காத்திருந்தும் தேவனைக்காணுமையால் சாத[illegible] முதலியவைகளை மண்ணாகவும் மணலாகவும் மாறும்படி செய்தாள். ஆகவே இப்போதும் இங்கேயுள்ள கடற்கரையிலுள்ள மணல், முழு அரிசி, நொறுங்கிய அரிசி, தவிடு என்ற ரூபத்தில் அமர்ந்திருப்பதைக்கண்டு மகிழலாம்.

மேலும் சக்கரம், சாவித்திரி, காயத்திரி, கலை, வாணி, கணபதி, கன்னிகை, தாணு, பிதிர் பிதிர், பிரமம், சிலை என்ற பதினொரு வகை தீர்த்தங்களால் இப்பாரதநாட்டின் தென்பாகம் புகழாம் இக்கன்னியாகுமரி விளங்கிறது.

காசிக்குப்போகிற பக்தர்களுக்கு கதி கிடைக்கவேண்டுமாயின், இக்கன்னியாகுமரியில் வரவேண்டுமென நம் புராணம் முறையிடுகிறது. இதன் உண்மையை ஆராய்வோமானால், காசியிலிலுள்ள விசுவநாதரை வணங்கியவர் அவரது அம்சமாகிய தேவியையும் வணங்கவேண்டுமென்பதாகும். இதை அறிந்தே பக்தர்கள் பலர் இத் தலத்தை நாடி நாள்தோறும் வருகிறார்கள்.

இத்துடன் எனது நுண்ணிய அறிவை குமரியின் அருளால் உங்கள் முன்னிலையில்கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

பல்லவி — த்ரியுஸுந்தரிஜகத் — ஸாவேரி—ஆதி
அம்பிகே பகவதி உன்
தெரிசனம் கண்டு மகிழ்ந்தேன்

அனுபல்லவி — பரமே பா வெளியே
பரிபூரண ஒளியே
ஸுரமுனி ஸேவித
ஸுந்திர ஹரப்ரியே

சரணம் — செறுத்த பிடியிடையில்
வெளுத்த வஸ்த்ரம் தரித்து
சிற்றுடை தன்னில் செறு
பாடகம் தண்டை தரித்து
திருத்த மனமிரங்கும்
இவளை ஒளி பொருந்தி
சின்னம் சிறிய தாம்
செண்பவிழ பன்னிகத்தாள்.

முடுகு சந்தம் }
பருத்த கொங்கையின் மீதில்
பதக்க முருண்டசைய

பளபள நகை பவன் மாலையுடனசைய
திருத்தமான மூக்குத்தி
ஜகமெங்கும் ஒளிவீச
தேவி என்னுடன் கூடி
எதிர்த்து நின்றுரைபேச (1)
கடற்கரையோரத்தில் (2)
கன்னி வடிவு கொண்டு
கையில் மாலையை வைத்து
கருணை விலாசம் கொண்டு
திடமுடன் பூசை செய்ய
தேவேந்திரனுமுண்டு
செய்யவே உந்தனருள்
திவ்விய அமுருதமுண்டு

முடுகு சந்தம் }
மடமடன்றலைகளும்
சமுத்திரம் பிரகாசிக்க

மதி முகத்தில் கஸ்தூரி
திலகம் பிரகாசிக்க
தடதடன்றுமிய
வாத்தியங்கள் வாசிக்க
ஸகல முனிவர்களும்
பாதத்தை பூஜிக்க

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

முற்றிற்று.

# சுசீந்திர ஆலயத்தின் அமைப்பு.

கன்னிகா பரமேஸ்வரி ஊஞ்சலில் இருந்து
வருந்திப் பாடியது

(மாற்றுப் பெற்றனர்.என்ற மெட்டு)

இராகப் தோடி. ரூபக தாளம்.

சுசீந்தையாம் பதி ஆலயம் தன்னில்
சோதியாம் தாணுமாலயன்
வரிசை மத்தியில் தெற்கினில் வாழும்
வரதனே பெருமாளுமாம்
உசிதமாய் காப்ப கிரக சுற்றினில்
உயர் கன்னியில அனந்தனும்
வசிப்பதோடு உற்சவ மூர்த்தி
வீற்றிருந்த தடத்துமே
தாணு ஸன்னதி உருத்திரா தசை
தங்கினன் நடராஜனும்
காணும் முன் பக்கம் இடபமும்
வளர் கரியாமல் முன் கருடனும்
தோமனூசை அகற்றிச் சென்றடி.
தொழுவா ரெண்ணங்கள் பலிக்கும்
பேணும் தாணு வடக்கிடமும்
பெருமாளும் தெற்கிடமும் நின்றனர்.

(முத்திநெறி—என்ற மெட்டு)

இராகம் : அரபி. ஆதி தாளம்.

தெக்கிடமும் வடக்கிடமும்
இடைமூடு கணபதியும்
துர்க்கையும் சங்கரனும்
துலங்குமிடம் நாரணனும்

---

(மாற்றுப்பெற்றனர்—என்ற மெட்டு)

இராகம் : தோடி. ரூபக தாளம்.

வடக்கு வாசல் கீழ்புறம் கால
வைரவனுதர் சுவாமியும்
மடமை நீங்கும் செண்பரும
மண்டபத்தின் வடதிசை
இடமதாய்க்கொண்டு அறம் வளர்த்தனள்
இருந்தனளெந்தன அம்மைதான்
திடமாம் சன்னதி வடக்கிழக்கினில்
சித்திர சபை தானுமே
சித்திர சபை கீழ்புறத்தினில்
செல்வ இந்திரப்பிள்ளையார்
பக்தியாய்த் தொழும் கோபுர வாசல்
பகர் நந்தி நடராஜனும்
முக்தியைக்காட்டும் துவஜத்தின் கீழ்புறம்
முளைத்த கொன்றையில் ஈசனர்
வெற்றியைத் தரும் வடக்கிடபமும்
விளங்கும் தெற்கினில் கருடனும்

---

(முத்திநெறி—என்றமெட்டு)

இராகம் : அரபி. ஆதி தாளம்.

வல்லவனும் கருடனுறை
வாழிடத்தின் கீழ் புறத்தில்
நல்லதொரு தெக்ஷிணாமூர்த்தியும்
ஆவலுடன் நான் கண்டு கொண்டேன்
கொடி மரத்தின் மேற்காக
குணபதியாம் ஆட்கொண்டார்
படிவு கொள்ளும் நந்திதேவனும்
பான்மையதாம் உய்யக்கொண்டார்
கொடியவரை சினந்தெரித்தார்
குறிப்புடையார் அதில் மூவர்
அடிமையென்று பிழைத்தார்கள்
ஆன இரு பேருமியர்
மன்னவனும் செண்பகராமன்
மண்டபத்தின் தெற்காக
முன்னவன் நீலகண்ட
விநாயக மூர்த்தியுமாம்
அன்னங்கள் பலவிதமாய்
அமைய வலிய மடப்பள்ளி
அன்னவைக்கும் தெற்காக
அமைந்தானே கங்காளன்

---

(முற்றுப்பெற்றனர்—என்ற மெட்டு)

இராகம் : தோடி. ரூபக தாளம்.

தெற்கு சிவிலி மண்டபத்தினில்
தெற்கு வாசல் வடக்கதாய்

அக்ருமாமணி இனியுமன்பர்கள்
அடையும் கைலாச நாதரும்
மக்கள் மூவரில் மேற்கு சிவலி
மண்டபத்தினில் தெற்கதாய்
பக்குவம் சேர வாதல் சாஸ்தாவும்
பதித்தவர் அங்கு தானுமே
மேற்கு வாசல் வடக்கு மூலையில்
மேன்மையாம் ராமசுவாமியும்
மேற் வாசல் கீழ்புறத்தினில்
மயிலின் மேல் சுப்பிரமணியரும்
காக்கும் ராமசாமியும் பர
கதியளித்திடும் நாராயணன்
நோக்கும் ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் பல
நோயகற்றும் ஸ்ரீசக்கிரவும்
ஜெகதீஸ்வர மகாதேவரும்
சிறப்பாய்த் தங்கினார் அவ்விடம்
அகந்தை போக்கி அன்புகொண்டு
அழுத கண்ணுடன் தொழுகையும்
அகத்தினில் சென்று தரிசனம் செய்து
அஞ்செழுத்தையும் சொல்லிடில்
சுகத்தை நல்குவார் துன்பம் நீக்குவார்
தூயவராவர் நிச்சயம்.

சு. பு.

---

குறிப்பு:- வெகுகாலமாக கருடனின் பின்பக்கம் மணினிற்
புதைந்து கிடந்த ஆஞ்சனேயர் என்ற

விசுவ ரூபத்தை தேவஸ்வ இலாக அதிகாரியாக வந்த பெருமை தங்கிய கேரளவர்மா ராஜா என்ற பெரியாரால், சித்திரசபையில் மேற்கில் இராமசாமி கோவிலுக்கு எதிராக இடைக்காலத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டதுண்டு.

இவ்வாலயத்தில் ஆவணி, மார்கழி, மாசி, சித்திரை இம்மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறும். அதில் மார்கழி மாதத்திருவிழாவில் பத்தாம் திருவிழா என்ற ஓர் விழா நற்கரும சங்கத்தாரின் நல்லெண்ணத்தால் நடந்துவருகிறது.

நீலகண்ட விநாயகரின் முன் அமைந்திருந்த வசந்த மண்டபத்தை நன்னிலையிலாக்கி வருடந்தோறும் வசந்தோற்சவம் நடத்த ஆன்ற முயற்சி எடுத்த தேவஸ்வம் இலாக உதவிக்கமிஷணர் பிரம்மஸ்ரீ M. K. நீலகண்ட அய்யர் அவர்களின் அருளால் அந்த உற்சவமும நடைபெறுவதுண்டு.

கோவிலில் தோற்றத்தில் பெருஞ்செலவில் அழகான மாற்றங்கள் சமீபகாலத்தில் செய்யப்பட்டன இவைகளுக்காக தேவஸ்வம் உதவி கமிஷணர் பிரம்மஸ்ரீ P. மாதேவ ஐயரவர்கள் யாவருடையவும் நன்றிக்குப் பாத்திரராயிருக்கிறார்கள்.

சுபம்!

ஓம் தத் ஸத்.

சுசீந்திர ஸ்தல மகிமை முற்றிற்று.

காருண்ய திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள்
ஆலயம் திறந்ததின் வைபவத்தின் பேரில்

# வாழ்த்துக் கவி.

---

(ராகம்: நாதநாமக்கிரியை. தாளம்: ஆதி)

வாழ்த்திடுவோம் ஐயா கீர்த்தியுடன் நன்றாய் (வா)
கீர்த்திபெற உழைத்து நேர்த்தியுடனே வாழ (வா)

1. தாழ்த்தப்பட்டோரெனவே தாரணியிலே தள்ளி
வீழ்த்தப்பட்டோரை யெல்லாம் விழிப்புறச் செய்த
கோனை (வா)

2. தீண்டாமை யென்னும் பேயை தீரமுடனே ஓட்டி
வேண்டாமென்ற உரைத்து வேரறுத்த தீரனை (வா)

3. காந்தி யகங்குளிர காங்கிரஸ் உறுதிபெற
சாந்திபெறவே செய்த சத்திய வீரசிங்கத்தை (வா)

4. இறைகாணும் கோவிலுக்குள் இன்பமுடனே செல்ல
முறை செய்த திருவிதாங்கூர் முன் மன்னர்
சித்திரையை (வா)

5. நிலைபெறும் இந்தியாவில் நீடிய நன்னாட்டிலெல்லாம்
மலையாள தேசமதை மாண்புறச்செய்த சீமானை (வா)

6. இந்து மதம் செழிக்க இறைவர் மனங்களிக்க
வந்து தொழுவதற்கு வரக்களித்த வீரனை (வா)

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி.

1. இந்து மதஸ்தருக்காய் தெருமறைத்தான்
வேறு எந்த மதஸ்தரையும் போக வைத்தார்
இந்தக்கொடுமை நீக்க மலையாளத்தார்—ஐப்பசி
இருபத்தேழு தாதுவில் விடைகொடுத்தார்
தடையில்லையே, தடையில்லையே கோவிலுக்குள் போக
இனி தடையில்லையே

2. இந்து பறையனென்றால் இழிகுலமாம்—அவன்
இதர மதத்தில் சேர்ந்தால் உயர்குலமாம்
இந்து பறையன் வைத்த இலைபழமாம்-இன்றைக்கும்
இறைவனுக்கு நேமிக்க எடுக்கலாமாம் (தடை)

3. ஜெவஹறை கோட்டைக்குள் விடமறித்தார்—
டௌணில் ஏறவொட்டாமலே தடுத்தார் [சாந்தியை
புவன வைதீகாரம மலையாளத்தார்—பழைய
கவனமில்லாமலா விடைகொடுத்தார் (தடை)

4. புத்தர் நபி கிறிஸ்துவும் போய்மரித்தார்—அவர்கள்
சித்திர மன்னராய் அவதரித்தார்
எத்தனையோ பேர்கள்-இதை பரித்தார்—இவர்போல்
எங்குமழியா புகழ் யார் படைத்தார் (தடை)

5. இராமனுஜர் சங்கர் போய் மறைந்தார்
ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயராய்த்தான் பிறந்தார்
ஏழை மக்களுக்கு இந்நாட்டில்
இரக்கம் வைத்துதான் நடந்தார் (தடை)

சித்திரை மன்னன் வாழும்நாட்டிலேதான் சிறப்பாய்
அமைந்த சுசீந்தை நகர்
தாணு சந்நதியில் வாழும நாகலிங்கம் சாற்றும்
இக்கவிகளைத்தான் ...றந்தான்.

---

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.**

அலெக்சந்திரா பிறஸ்,

நாகர்கோவில்.